**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 29 July 2015

# திசை திருப்பிய தாதிமைப் படிப்பு

வனிதா மணியரசு

தாதியர் தொழிலில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருக்கும் 27 வயது சுரேஷ் ராஜசேகரம் முயற்சியாலும் நம்பிக்கையாலும் முன்னேற்றம் அடைந்து வரும் ஒரு முன்னுதாரண இளையர்.

உயர்நிலை இரண்டில் விரைவு பிரிவில் சிறந்த தேர்ச்சி பெறாததால் உயர்நிலை மூன்று வழக்கநிலைக்குச் சென்ற சுரேஷ், 'என்' நிலை தேர்விலும் போதிய தேர்ச்சி பெறவில்லை. அதனால் 'ஓ' நிலை படிப்பைத் தொடர முடியாது பள்ளியிலிருந்து விலகினார். தகாத காரியங்களில் ஈடுபட்டு, தவறான வழிக்குச் செல்லவிருந்தார்.

அச்சமயத்தில் ஒருநாள் உறவினர் ஒருவர் அவருடைய படிப்பைப் பற்றி விசாரித்தபோது, பதில் கூற முடியாமல் தாயார் தலைகுனிந்ததைப் பார்த்த சுரேஷிடம் மாற்றம் ஏற்பட்டது.

சீமெய் தொழில் நுட்பக் கல்விக் கழகத்தில் தாதிமைத் துறையில் சேர்ந்தார். அங்கு அவர் கற்ற பாடங்களும் பெற்ற அனுபவங்களும் தாதிமைத் துறையில் அவருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது. வேலையிட பயிற்சிகளில் அவர் சந்தித்த சூழ்நிலைகள் அத்துறையில் ஈடுபாட்டை அதிகரித்தது. முழுக் கவனத்தையும் கடும் உழைப்பையும் தந்து படித்தார்.

நான்கிற்கு 3.74 மதிப்பெண்களுடன் 'நைடெக்' சான்றிதழ் பெற்று, நீ ஆன் பலதுறை தொழிற் கல்லூரியில் பட்டயப் படிப்பைத் தொடர்ந்தார். அங்கும் சாதித்தார். 3.95 மதிப்பெண்கள் பெற்று, வெள்ளிப் பதக்கத்துடன் கல்லூரியின் தலைசிறந்த மாணவர்களில் ஒருவராகத் தேர்ச்சி பெற்றார்.

சுரேஷிற்கு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் 'எலிஸ் லீ' தாதியர் பள்ளியில் பட்டக் கல்வி மேற்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

சுகாதார அமைச்சின் உபகாரச் சம்பளத்துடன் 2013ல் பட்டப் படிப்பைத் தொடங்கினார் சுரேஷ். பட்டயக் கல்வியை முடித்திருந்ததால் நேரடியாக 2ஆம் ஆண்டில் சேர்ந்தார். சுகாதார அமைச்சின் 'Care to Go Beyond' இயக்கத்தின் தூதராகவும் உள்ளார் சுரேஷ்.

இடையில் தேசிய சேவைக்காக காத்திருந்த காலத்தில் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் ஆறு மாதங்கள் தாதியராக பணி புரிந்தார். அச்சமயத்தில் பல புதிய திறன்களை வளர்த்துக்கொண்டதாகவும் தாதியர் பணியில் ஆழமான ஈடுபாடு ஏற்பட்டதாகவும் கூறினார் சுரேஷ்.

ராணுவத்தில் சுரேஷ் முதலுதவிப் படையில் சேவை ஆற்றினார். ஓராண்டு காலம் புருணையில் பயிற்சி பெற்ற அவருக்கு சிறந்த படைவீரர் விருதும் கிடைத்தது.

சீன மொழியில் சரளமாக உரையாடும் சுரேஷ், ஒளிவழி 8இன் நாடகத் தொடர் ஒன்றிலும் நடித்துள்ளார். 'யு கேன் பீ அன் ஏஞ்சல்டு' என்ற சீன நாடகத்தில் மாணவ தாதியாக நடித்துள்ளார் சுரேஷ்.

"பொதுவாகத் இத்தொழிலில் பெண்களே ஈடுபடுவார்கள். ஆனால், தற்போது சமூகத்தின் கண்ணோட்டம் மாறி வருகிறது. ஆண்களும் தாதிமைத் தொழிலில் ஆர்வம் காட்டுகின்றனர்," என்ற சுரேஷ், அதிகமானோர் இதனை முழு நேரத் தொழிலாகக்கொள்ள வேண்டும்," என்றார்.

வழி தவறிப்போக இருந்த சுரேஷ், இன்று உயர்ந்த நிலையை அடைந்திருப்பதில் அவருடைய தாயாருக்கு அளவில்லா பெருமை. அவருடைய சகோதரிகளும் படிப்பதால் சுரேஷின் உபகாரச் சம்பளம் குடும்பத்தின் பொருளாதார நிலைமைக்கு மிகவும் உதவியுள்ளது.

"நல்ல தாதியாக இருக்க அதிகம் பொறுமை தேவை," என்று கூறும் சுரேஷ் பட்டப் படிப்பு முடிந்ததும் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையில் பணியைத் தொடங்க உள்ளார்.

தீவிர பராமரிப்புத் துறையில் முதுநிலைப் பட்டப் படிப்பைத் தொடரவும் சுரேஷ் திட்டமிட்டுள்ளார்.



சுரேஷ் ராஜசேகரம்
**படம்: எம்ஓஹெச் ஹோல்டிங்ஸ்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.